செய்தி வெளியீடு எண்.56 நாள்.18.1.2010

மக்கள் நல்வாழ்வுத் துறை

## பத்திரிக்கைச் செய்தி

தமிழ்நாட்டில் மாவட்ட மனநலத்திட்டம் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் மனநோயாளிகளுக்கும், மனநோய்க்கு எளிதில் இலக்காகும் நபர்களுக்கும் ஆரம்ப சுகாதார நிலையம், அரசு தாலுக்கா மருத்துவமனைகள், மாவட்ட தலைமை மருத்துவமனைகளிலேயே சிறப்பான மருத்துவ சிகிச்சை அளிப்பதாகும். இத்திட்டம் செயல்படுத்துவதற்கு முன்பு, மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளிலும், பெருநகரங்களில் உள்ள மனநல மருத்துவர்களிடம் மட்டுமே சிகிச்சை பெற முடிந்தது. இதனால், அதிகமான பொருட்செலவும், நேரமும் உடன் வருபவர்களின் நேர இழப்பும் ஏற்பட்டு வந்தது. சிகிச்சையின் இடையே தவிர்க்க இயலாத காரணத்தினால் தொடர் சிகிச்சை எடுக்க இயலாத நிலையும் இருந்து வந்தது. மனநலத்திட்டம் தொடங்கப்பட்ட பின்னர், மனநோயாளிகள் அதிக அளவில் தங்கள் வசிப்பிடங்களுக்கு அருகிலேயே சிகிச்சை பெற்று குணமடைந்து வருகிறார்கள்.

மாவட்ட மனநலத்திட்டம் அமுலில் உள்ள திருவள்ளூர் மாவட்டத்தில் ஒரு மனநல மருத்துவர் ஒப்பந்த முறையில் தொகுப்பூதியத்தில் பணியாற்ற தேவைப்படுகிறார். இப்பணி முழுக்க முழுக்க தற்காலிகமானதாகும். மனநல மருத்துவர் (Psychiatrist) கல்வித்தகுதி – MBBS DPM. வயது வரம்பில்லை.

சொந்த மாவட்டத்தை சேர்ந்தவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

மனநல மருத்துவருக்கு மாத தொகுப்பூதியமாக ரூ.10,000/. வழங்கப்படும். விருப்பமுள்ளவர்கள் அவர்களது விண்ணபத்தினை 25.1.2010க்குள் கீழே உள்ள முகவரிக்கு தங்களின் பெயர், பிறந்த தேதி, கல்வித் தகுதி, சொந்த மாவட்டம், சான்றிதழகளின் நகல் ஆகியவற்றை இணைத்து கீழ்க்கண்ட முகவரியை குறிப்பிட்டு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இயக்குநர்,
மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம்,
(மாவட்ட மனநலத்திட்டம் – தொகுப்பூதிய பணியிடம்)
டி.எம்.எஸ். வளாகம், தேனாம்பேட்டை,
சென்னை–6.

வி.கு. சுப்புராஜ்
அரசு முதன்மைச் செயலாளர்

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–600 009.